# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2019/19 - 2017 මැයි මස 19 වැනි සිකුරාදා - 2017.05.19

*2019/19 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: அனு/ 4/5/2/7/3/81/1.
காணி அமைச்சின் இல.: 4/3/9/2014/WS/149.

அநுராதபுரம் வடக்கு நீர்வழங்கும் திட்டத்தின் கீழ் தண்ணீர் தாங்கி மற்றும் உத்தியோகபூர்வ விடுதி நிர்மாணிப்பதற்கான காணியினை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித் திருப்பதனால், 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

அநுராதபுரம் மாவட்டத்தில், நம்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், பிஹிம்பியகொல்லாவைக் கிராமத்தில் அமைந்துள்ளதும் கிராம அலுவலர் பிரிவில், இல. 81, பிஹிம்பியகொல்லாவை, நிலஅளவையாளர் நாயகத்தினால் 2017.03.15 ஆந் திகதியன்று தயாரிக்கப்பட்ட இறுதிக் கிராம வரைபட இலக்கம் 580, காணித்துண்டு இலக்கம் 228 எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.2023 ஹெக்டயார் விஸ்தீரண முள்ளதுமான பிஹிம்பியகொல்லாவை மூக்கலான, கொலொன் கஹவத்த எனும் பெயரினை உடைய காணித் துண்டின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

**காணியின் பெயர்: பிஹிம்பியகொல்லாவை மூக்கலான, கொலொன்கஹவத்த; உரிமை கோருவோர்: திரு. சமரசிறி ராஜகருணா, பிஹிம்பியகொல்லாவை; விஸ்தீரணம்: 0.2023 ஹெக்டயார்.**

வடக்கு: காணித்துண்டு இலக்கம் 227; கிழக்கு: காணித்துண்டு இலக்கம் 230; தெற்கு: காணித்துண்டு இலக்கம் 230 மற்றும் 229; மேற்கு: காணித்துண்டு இலக்கம் 229 மற்றும் 227.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு நம்பேவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஏ. எம். டபிள்யூ. ஏ. அமுணுகம,
பிரதேச செயலாளர்,
நம்பேவ.

பிரதேச செயலகம்,
நம்பேவ,
2017, மே 17.

6 - 130

1A - G 25557 - 17 (2017/05)

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: டீஎஸ்ஏஎம்/எல்ஏஎன்/08ஏகியூ/09/கீஓ-VI.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/6/2014/எச்டப்ளிவ்/335.

தென் மாகாணத்தில், அம்பாந்தோட்டை மாவட்டத்தில், அம்பலன்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில், சியம்பலாகொடே கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர்களால் தயாரிக்கப்பட்ட இறுதிக் கிராம வரைபட இல. 430/5/9 ஆம் வரைப்படத்தின் துண்டுக்காக என்னால் 1951/14 ஆம் இலக்க 2016.01.27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலில் காணி துண்டு இல. 87, 88, 89, 90, 91, 92 மற்றும் 93 ஆகிய காணித் துண்டுகளின் காணியின் பெயர் சியம்பலாகொடேஹேன்யாய என குறிப்பிடப்பட்டுள்ளதை, கலகாவவத்தை என திருத்தம் செய்யப்பட வேண்டும்.

எச். திலகவர்தன,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அதிகாரி,
அம்பலன்தோட்டை.

பிரதேச செயலகம்,
அம்பலன்தோட்டை,
2017, மே 19.

6 - 131